# 6.II.எண்கள் 1.2

I. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1). 45 மற்றும் 75 இன் மீ.பெ.கா ________ ஆகும்.

2). இரு அடுத்தடுத்த இரட்டை எண்களின் மீ.பெ.கா _______.

3). 3 மற்றும் 9 ஆகிய எண்களின் மீ.சி.ம 9 எனில், அவற்றில்

மீ.பெ.கா ________ ஆகும்.

4). 26, 39 மற்றும் 52 ஆகிய எண்களின் மீ.சி.ம __________ ஆகும்.

5). 57 உடன் _____ என்ற சிறிய எண்ணைக் கூட்டினால், அது 2, 3, 4

மற்றும் 5 ஆல் சரியாக வகுபடும்.

II. சரியா, தவறா எனக் கூறுக.

6). 57 மற்றும் 69 ஆகியவை சார்பகா எண்கள்.

7). 17 மற்றும் 18 ஆகிய எண்களின் மீ.பெ.கா 1 ஆகும்.

8). இரு அடுத்தடுத்த எண்களின் மீ.சி.ம, அவ்விரு எண்களின்

பெருக்கற்பலனுக்குச் சமமாகும்.

9). இரு சார்பகா எண்களின் மீ.சி.ம, அவ்வெண்களின்

கூடுதலுக்குச் சமம்.

LIVEWORKSHEETS

10). இரு எண்களின் மீ.பெ.கா எப்போதும் அவற்றின் மீ.சி.ம-வின் காரணியாக இருக்கும்.

III. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

11). பின்வரும் இணைகளில், எவை சார்பகா எண்கள் ஆகும்?

அ) 51, 63 ஆ) 52, 91 இ) 71, 81 ஈ) 81, 99

12). 8, 9 மற்றும் 12 ஆகிய எண்களால் வகுபடும் மிகப்பெரிய 4 இலக்க எண் என்ன?

அ) 9999 ஆ) 9996 இ) 9696 ஈ) 9936

13). இரு எண்களின் மீ.பெ.கா 2 மற்றும் அவற்றின் மீ.சி.ம 154. அவ்விரு எண்களுக்கிடையே உள்ள வேறுபாடு 8 எனில், அவற்றின் கூடுதல் ----------

அ) 26 ஆ) 36 இ) 46 ஈ) 56

14). 120-ஐ மீ.சி.ம-ஆகக் கொண்ட எண்களுக்குப் பின்வரும் எந்த எண்ணானது அவற்றின் மீ.பெ.கா-ஆக இருக்க இயலாது?

அ) 60 ஆ) 40 இ) 80 ஈ) 30

15). 15 மற்றும் 25 ஆகிய எண்களின் மீ.பெ.கா.

அ) 40 ஆ) 10 இ) 5 ஈ) 75

LIVEWORKSHEETS